(3) வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரம் . கேள்வி எண் 1.

குடிநீர் வழங்கு திட்டங்கள்

*1. வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பென்னலூர்பேட்டைத் தாலுகா வட்டம் ஊத்துக்கோட்டை பேரூராட்சியின் குடிநீர்த் திட்டம் தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஊத்துக்கோட்டை பேரூராட்சிக்கு குடிநீர்த்திட்டம் அமைப்பதற்கான ஆய்வு மதிப்பீடு ஒன்று ரூ. 15,500க்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் அனுமதிக்கப்பட்டு இத்திட்டம் ஆய்வு நிலையில் உள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, அப்படி 15,000 ரூபாய் செலவில் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டம் எப்போது முடிவடையும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 1973 மார்ச் மாதத்தில் இந்தத் திட்டம் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

*2 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether there is any proposal to take up a scheme to bring water of South Pennar from the Kodayalam dam (now under construction) in Hosur Block to Hosur town for drinking purposes; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) பல்வேறு நீர்வளங்களிலிருந்து நீரைக் கொண்டு வரும் வாய்ப்புகளைக் கருதிப் பார்த்து, ஒசூர் பேரூராட்சியில் நீர் வழங்கு திட்டம் ஒன்றை நிறைவேற்றுவதற்கான செயற்குறிப்பு ஆய்விலுள்ளது.

1973 டிசம்பர் 2]

(இ) கோடியாலம் அணை தண்ணீர் சேமிப்பதற்கான நீர்த் தேக்கம் அல்ல. அது அருகிலுள்ள 200 ஏக்கரா பாசன நிலங்களுக்கு தண்ணீர் கிடைப்பதைத்தான் உறுதிப்படுத்துகிறது. மேலும் அது ஓசூரிலிருந்து சுமார் 18 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. கோடியாலம் அணைக்கட்டிலிருந்து தண்ணீர் எடுப்பதை விட சிக்கனமாய் இருக்கக்கூடிய வேறு மாற்று ஆதாரங்கள் சிக்கனமில்லாதவை என்றும் நிர்மாணிக்க இயலாதது என்றும் அறியப்பட்டால், கோடியாலம் அணைக்கட்டிலிருந்து தண்ணீர் எடுப்பது ஆய்வு செய்யப்படும்.

THIRU B. VENKATASWAMY: We are suffering a lot because of there is non-protected water-supply to Hosur today. May I know when exactly this water problem will be solved so far as Hosur is concerned?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அது ஆய்வில் இருப்பதாகச் சொன்னேன். விரைவில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: The anicut at Kodavalam is completed. There is the regular flow from South Pennar. Hosur is fastly developing with Government starting many industries there and many industrialists from North India have also come to start some industries in Hosur. Hosur town should therefore be provided with all facilities. Will the Hon. Chief Minister see to it that the pumping establishment is improved?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதுபற்றி ஆய்வுகள் மேற்கொள்வதற்கான நிலைமைகள் பரிசீலிக்கப்படும்.

சிறந்த நூல்களுக்கான பரிசுத் திட்டம்.

*3. வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தின் தரமான நூல்களுக்கு உரிய பரிசளிப்பு திட்டம் விரிவு படுத்தப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?